## ஆற்காடு நகராட்சி

### மன்றக் கூட்டப்பொருள்
### 30.05.2020ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

**பொருள் எண்.01)** இந்நகராட்சி ஆணையாளர்(பொ) அவர்களின் ஏப்ரல்–2020ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்
ந.க.எண்.0665/2018/சி1

**தீர்மானம் எண். 103 – பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண்.02)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல்–2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மானம் எண். 104 – பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண். 3)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2, 3, 4, 7 மற்றும் 30 ஆகிய பகுதிகளில் உள்ள சிறுமின்விசை பம்புகள் பழுதடைந்துள்ளதால் பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட பகுதியில் உள்ள சிறுமின்விசை பம்புகளை பழுது பார்த்துக்கொள்ள உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ள தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு:-
**1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்கிள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 105 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4)** இந்நகராட்சிக்கு சொந்தமான வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 75 எச்.பி. மின் மோட்டர் பழுதடைந்துள்ளதால் தங்குதடையின்றி பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்குவதற்கு அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்வதற்கான தோராய செலவினம் ரூ.30,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.
**1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 106 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5)** நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள RO Plant ஐ சர்வீஸ் செய்து பழுதடைந்துள்ள உதிரி பாகங்களை மாற்றி புதிதாக பொருத்துல் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

அலுவலக குறிப்பு:-
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3) இப்பணிக்கான செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 107 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2, 3, 4, 7 மற்றும் 30 ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சிறுமின் விசைபம்புகள் பழுது பார்த்துக்கொள்ள தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம். |
|---|---|---|
| 1 | ஸ்ரீ விஜயலட்சுமி எலக்ட்ரிகல்ஸ் ஒர்க்ஸ் | 29,500/– |
| 2 | ஸ்ரீ பாலாஜி டிரேடர்ஸ் | 29,990/– |
| 3 | ஸ்ரீ கோபி டிரேடர்ஸ் | 29,630/– |

அ.கு.
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ விஜயலட்சுமி எலக்ட்ரிகல்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 108 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 7)** நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள **RO PLANT** ஐ சர்வீஸ் செய்து பழுதடைந்துள்ள உதிரி பாகஙகளை மாற்றி புதிதாக பொருத்துல் பணிக்கு தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம்.ரூ |
|---|---|---|
| 1 | Global Water Systems,Arcot | 27,730/– |
| 2 | Global Water Technologies,Chennai | 36,462/– |
| 3 | Anand Aqua Tech, Arcot | 36,226/– |

அலுவலக குறிப்பு:-
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Global Water Systems,Arcot நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 109 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 9, 20 மற்றும் 22 ஆகிய பகுதிகளில் உள்ள சிறுமின்விசை பம்புகள் பழுதடைந்துள்ளதால் பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட பகுதியில் உள்ள சிறுமின்விசை பம்புகளை பழுது பார்த்துக்கொள்ள உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ள தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

**1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 110 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 9)** ஆற்காடு நகராட்சி அலுவலகத்துக்கு 2020–21 ஆண்டுக்கு தேவைப்படும் பதிவேடுகள், படிவஙகள், எழுதுபொருட்கள், கணினி உதிரிகள், பிரிண்டர் டோனர் போன்றவற்றை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகம் NAPCO நிறுவனம் அல்லது அவர்களின் டீலர்களிடமிருந்து நேரடியாக வாங்க தேவைப்படும் தோராய செலவினம் ரூ.10.00 லட்சத்துக்கு நகரமன்ற அனுமதி கோரப்படுகிறது.

அ.கு. :-

1. அலுவலக செயல்பாடுகள் தடையின்றி சிறப்பாக நடைபெற, மேற்கண்ட அவசியமான எழுதுபொருட்கள் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. இத்தொகை ரூ.10.00 லட்சத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1634/2018/பி2)

**தீர்மானம் எண். 111 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 10)** ஆற்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் (COVID – 19) கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருப்பதற்கு தடுப்பு நடவடிக்கையாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் நகராட்சிக்கு சொந்தமான மூன்று வாகனங்களில் பொருத்துவதற்கு மூன்று எண்ணம் ஒலிபெருக்கிகள் (AHUJA-AMPLIFIER) சப்ளை செய்தல் பணிக்கு தோராய செலவினம் ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

அலுவலக குறிப்பு:-

**1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**3)** இப்பணிக்கான செலவினத்தை SDRF -COVID–2019–20 நிதி ஒதுக்கீட்டில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**தீர்மானம் எண். 112 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11)** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக் கழிவு மேலாண்மை திட்டத்தின் பிரித்தெடுக்கும் குப்பைகளை இலகு ரக வாகனத்தின் மூலம் கொண்டு செல்ல மூன்று ஓட்டுநர்கள் குறைவாக உள்ளதினால் ஆண்கள் சுய உதவிக் குழு மூலம் மூன்று ஓட்டுநர்களை பணியில் ஈடுபடுத்தி உள்ளதிற்கான அனுமதி 31.05.2020ம் நாளுடன் முடிவு பெறுகிறது. எனவே இதே ஆண்கள் சுய உதவி குழு பணியாளர்களை கொண்டு மேலும் 01.06.2020 முதல் 30.09.2020 வரையிலான நாட்களுக்கு 2019–2020ம் வருடத்திய மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்யப்பட்ட ஓட்டுநர் தின கூலி ரூ.393/–ஐ மூன்று

மாதங்களுக்கு வழங்கி பயன்படுத்திட தோராய செலவினத் தொகை ரூ. 1.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திடக் கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள மூன்று லகு ரக குப்பை எடுக்கும் வாகனத்தை இயக்க மூன்று ஆண்கள் சுய உதவி குழு பணியாளர்களை ஈடு படுத்தி வருவதில் மேலும் மூன்று மாதங்களுக்கு அதே தின கூலி அடிப்படையில் நீடிப்பு செய்ய மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.618/2017/எச்1

**தீர்மானம் எண். 113 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12)** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் மேற்கொள்ள கிருமி நாசினிகளான சுண்ணாம்பு தூள், பிளிச்சீங் பவுடர், லைசால், 1 சதவீதம் சோடியம் ஹைப்போகிலோரைட், முகவுரை, கை கழுவும் திரவம், பெனாயில் ஆசிட், திரவ சோப்புகள், தனி நபர் பாதுகாப்பு உடைகள் மற்றும் அதன் சம்மந்தப்பட்ட உபகரனங்கள் உடனடியாக கொள்முதல் செயய் வேண்டியுள்ளதால் அரசு அங்கீகாரிக்கப்பட்ட தி வாலாஜா ஆக்ரோ ேன்சிஞ்னியரிங் வாலாஜா, என்பவரிடம் நேரடியாக கொள்முதல் செய்ய தோராய செலவனித் தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இந்நகராட்சி 30 வார்டு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோன வைரஸ் தடுப்பு பணிகள் மிக தீவிரமாக மேற்கொண்டு வருவதில் கிருமி நாசினி மற்றும் அதன் தொடர்புடைய உபகரனங்கள் உடனடியாக கொள்முதல் செய்ய மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
3. மேற்படி செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.556/2020/எச்1

**தீர்மானம் எண். 114 – அனுமதிக்கப்பட்டது.**

**ஆற்காடு** **தனி அலுவலர்,**
**நாள்: 30.05.2020** **ஆற்காடு நகராட்சி.**